2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

120—

வட்டாட்சியர் அலுவலகம்

***6446 திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கருமந்துறையில் தனியாக வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கருமந்துறை வட்டமானது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிர்ணயித்த அளவுகோலான குறைந்தபட்ச பரப்பளவு, மக்கள்தொகை, வருவாய்க் கிராமங்களினுடைய எண்ணிக்கை ஆகியவற்றை நிறைவு செய்யவில்லை என்ற காரணத்தினால், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தைப் பிரித்து கருமந்துறையை மையமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.*

திரு. செ. பெருமாள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன். சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கல்வராயன் மலையைச் சுற்றி 200 கிலோ மீட்டர் சுற்றளவுள்ளது. கருமந்துறையைச் சுற்றி*

அமைந்துள்ள 120 கிலோ மீட்டர் தொலைவில் சின்ன கல்வராயன் மலை, பெரிய கல்வராயன் மலைப் பகுதி, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்கின்றது. அப்பகுதி மக்களுடைய நலனைக் கருதி, இந்தக் கருமந்துறையை மையமாக வைத்து ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தருமாறு கேட்டிருந்தேன். பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலுள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையிலே முன்னுரிமை கொடுத்து அந்த மக்களுடைய முன்னேற்றத்தைக் வலுப்படுத்தும்வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பல திட்டங்களை மலைவாழ் மக்களுக்காகத் தீட்டி அந்தத் திட்டங்கள் நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேவகையில், அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கருமந்துறையினை மையமாகக் கொண்டு ஒரு வட்டாட்சியர் அலவலகம் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை நிறைவேறும். எனவே, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து அமைத்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில் தமிழக அரசால் கொண்டுவரக்கூடிய திட்டங்கள் விரைந்து மக்களைச் சேர வேண்டும் என்ற நோக்கத்தோடும், மக்களுடைய சிரமங்களைக் குறைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், மக்களுடைய தேவையற்ற அலைச்சலையும், நேரத்தையும் மிச்சப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடும், தேவைப்படுகின்ற இடங்களில் எல்லாம் புதிய வட்டங்களை உருவாக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்த ஆணையினுடைய அடிப்படையில், இன்றைக்கு தேவைப்படுகின்ற வட்டங்கள்,

2013 ஏப்ரல் 1]

தேவைப்படுகின்ற மாவட்டங்களிலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருக்களைப் பெற்று பரிசீலிப்பதற்கு ஒரு புதிய உயர்மட்டக் குழுவை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர், நில சீர்திருத்த ஆணையர் உள்ளிட்டோர் உயர்மட்டக் குழுவினுடைய உறுப்பினர்களாவர். அந்தந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் மூலமாகக் கருத்துரு பெறப்பட்டு, தேவைப்படுகின்ற இடங்களிலே புதிய வட்டங்கள் அமைக்கப்படுகின்ற சூழ்நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பதவியேற்ற இரண்டாண்டு காலத்திற்குள் இன்றைக்குத் தமிழகத்திலே 9 புதிய வட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய இந்தக் கருமந்துறை வட்டமானது, குறைந்த அளவு வருவாய் கிராமங்கள் கொண்டது ஆகும். ஒரு வட்டம் அமைக்க 30 வருவாய் கிராமங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் 4 வருவாய் கிராமங்கள் மட்டுமே இருக்கின்ற காரணத்தினாலும், 11 குக்கிராமங்கள் மட்டுமே இருக்கின்ற காரணத்தினாலும், குறைந்தபட்ச மக்கள்தொகை ஒரு இலட்சம் என்று இருக்க வேண்டிய அடிப்படை நோக்கத்தை நிறைவு செய்யாமல், 28,212 மக்கள் தொகையை மட்டுமே கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், இந்தப் பகுதியில் புதிய வட்டம் அமைக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. எனினும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு கிராமப்புறங்களிலே, குறிப்பாக மலைவாழ் மக்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்கின்ற விதங்களிலே, 'அம்மா திட்டம்' என்ற ஒரு அற்புதமான திட்டத்தினை, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் அதிகாரிகளைத் தேடிச் செல்கின்ற நிலையினை மாற்றி, அரசு அலுவலர்கள் மக்களைத் தேடிச் செல்லக்கூடிய ஓர் அற்புதமான திட்டமான 'அம்மா திட்டத்தை' கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த 'அம்மா திட்டத்தின்' மூலமாக வாரத்திலே ஒரு நாள், அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அதிகாரிகளும் ஒவ்வொரு கிராமமாகத் தேடிச்சென்று,

[2013 ஏப்ரல் 1

மக்கள் கொடுக்கக்கூடிய மனுக்களைப் பெற்று அந்த இடத்திலேயே அந்த மனுக்களுக்குத் தீர்வு காணக்கூடிய ஓர் ஒப்பற்ற திட்டம் 'அம்மா திட்டம்'. அந்த அடிப்படையில் உங்களுடைய பகுதியான கருமந்துறை பகுதிக்கு, மாவட்டத்தில் 6 மாதங்களுக்கு ஒரு முறை, உங்கள் பகுதிக்கு வருவாய் வட்டத்தைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளும் நேரடியாக வருவார்கள். ஆகவே, அம்மா திட்டத்தினை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

உயர்மட்ட மற்றும் புறவழிச் சாலைகள், பாலங்கள், பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும் மிக முக்கியப் பங்கினை வகிப்பது சாலைக் கட்டமைப்பு என்பதைக் கருத்தில் கொண்டும், ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கணிப்பதில் சாலைக் கட்டமைப்பு இன்றியமையாததாக விளங்குகிறது என்பதைக் கருத்தில் கொண்டும் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

அந்த வகையில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையிலும், பயண நேரம் மற்றும் வாகன இயக்கச் செலவினைக்